நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மன்னார்குடி
முன்னிலை: திரு.ஜெ. தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி
2026 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
சுருக்கு விசாரணை வழக்கு எண்.472/2022

CASE SUMMARY

Sl. No.	Description	Remarks
1	The period of remand of the accused	Remanded on : -- Released on : 29.02.2024 (88 Cr.,Pc Bond)
2	The date of filing of complaint/final report in the Court	21.06.2022
3	The date of committal of the case to the Court of Sessions	Not Applicable
4	The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be	11.06.2024
5	Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .	Nil
6	Date of examination in Chief and Cross examination of a witness	PW1 – 30.01.2025 Cross –25.06.2025
7	Date of examination of the accused under section 313 of the Court	09.07.2025
8	Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be	Not Applicable
9	Grant of stay by superior Courts and the results thereof	Not Applicable

ஷோபனா, வயது 33/2022, த/பெ. ஜெயசீலன், 48,அண்ணா நகர், மன்னார்குடி– 614001 திருவாரூர் மாவட்டம்.		.............குற்ற முறையீட்டாளர் (வாதி)
	/எதிர்/	
மோகன்தாஸ், வயது 43/2022,		

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:06:36 +0530

த/பெ.கிருஷ்ணசாமி, 811/2–ராமநாதபட் சந்து, நான்கு கால் மண்டபம், தஞ்சாவூர்.		...............எதிரி

இவ்வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1861 பிரிவு 142 ன் கீழ் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கு.வி.மு.ச. பிரிவு 200 ன் கீழ் தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு, அதனை இந்நீதிமன்றம் கடந்த 22.06.2022 ஆம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையிலிருந்து வந்து, என் முன்பாக 09.07.2025 அன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சதீஸ்குமார்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.துரை.வீரையன் B.A.,B.L.,அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (15.05.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

//தீர்ப்புரை//

1) புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்றமுறையீட்டின் சுருக்கம்

புகார்தாரரும், புகார்தாரரின் குடும்பத்தினரும் எதிரிக்கு கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக நன்கு அறிமுகமாகி பழக்கப்பட்ட நபர்கள் ஆவார்கள் என்றும், அந்த வகையில் எதிரி அவரது சொந்த செலவினங்களுக்காக வேண்டி ரூ.3,00,000/–தொகை வேண்டும் என புகார்தாரரிடம் கேட்டுள்ளார் என்றும், மேலும் அந்த தொகையை எதிரி புகார்தாரரிடம் மூன்று மாத காலத்திற்குள் திருப்பி தந்துவிடுவதாக உறுதி அளித்துள்ளார் என்றும், எதிரி தனது குடும்பத்திற்கு நன்கு தெரிந்தவர் என்ற வகையில் புகார்தாரரும் எதிரி கூறிய வார்த்தைகளை உண்மை என நம்பி எதிரி கேட்ட ரூ.3,00,000/– தொகையை கடந்த 2022 ஜனவரி மாதம் எதிரியிடம் கொடுத்துள்ளர் என்றும், அவ்வாறு புகார்தாரர் எதிரியிடம் பணத்தை கொடுக்கும் போது எதிரியிடமிருந்து பத்திரம் ஒன்றை எழுதி வாங்கிக் கொண்டுள்ளார் என்றும், மேற்படி பணத்தை பெற்றுக் கொண்ட எதிரி 3 மாதத்திற்குள் தொகையை கொடுக்காமல் தொடர்ந்து இழுத்தடித்து வந்துள்ளார் என்றும், இறுதியாக எதிரி தான் தரவேண்டிய தொகைக்காக அவரது வங்கிக்கணக்கு வைத்துள்ள தஞ்சாவூர் வடக்கு மெயின்ரோடு முகவரியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கிளையின் ரூ.3,00,000/–த்திற்கான (கணக்கு எண்:136401000025314) (காசோலை எண்:625846)காசோலை ஒன்றை 29.04.2022 தேதியிட்டு புகார்தாரரின் பெயரிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், அவ்வாறு எதிரி அவரது வங்கி காசோலையை கொடுக்கும்போது தான் எழுதிக் கொடுத்த பத்திரத்தை திரும்ப பெற்றுக்கொண்டதாக புகார்தாரர் தெரிவிக்கிறார் என்றும், எதிரியின் வார்த்தையை உண்மை என நம்பிய புகார்தாரர் எதிரி கொடுத்த காசோலையை பணமாக்கும் பொருட்டு அவரது வங்கி கணக்கு வைத்துள்ள மன்னார்குடி சௌத் இந்தியன் வங்கிக் கிளையில் கடந்த 29.04.2022 அன்றே வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் எதிரி கொடுத்த காசோலையானது புகார்தாரரின் வங்கியால் போதிய பணமில்லை (Funds Insufficient) என காரணம் காட்டப்பட்டு கடந்த 30.04.2022 அன்று திருப்பப்பட்டுவிட்டது என்றும், பின்னர் காசோலை திருப்பப்பட்ட விபரத்தை தெரிந்து கொண்ட புகார்தாரர் எதிரி கொடுத்த காசோலையை பணமாக்காமல் திருப்பப்பட்ட விவரத்தை தெரிவித்தும், காசோலையில் கண்டுள்ள தொகையை புகார்தாரருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:06:43 +0530

என்று அறிவுறுத்தியும் அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 05.05.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை எதிரி வசிக்கும் முகவரிக்கு ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்தேன் என்றும், அதனை எதிரி பெற்றுக்கொள்ளாததால் Unclaimed எனத் காரணம் காட்டப்பட்டு கடந்த 13.05.2022 அன்று திருப்பப்பட்டவிட்டது என்றும்,அறிவிப்பை பெற்றுக்கொள்ளாத எதிரி இதுநாள் வரை புகார்தாரருக்கு பதிலோ,பணமோ தராமல் தொடர்ந்து இழுத்தடித்து வருகிறார் என்றும்,எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டே வேண்டுமென்றே என்னிடம் காசோலை கொடுத்து நம்பவைத்து,ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என்றும், மேற்படி எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் படி குற்றமாகிறது என்றும், இவ்வழக்கானது புகார்தாரரின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளமல் திருப்பி அனுப்பிய தேதியான 13.05.2022ம் தேதியில் இருந்து 45 நாட்களுக்குள் அதாவது 26.06.2022க்குள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உரிய நீதிமன்ற கட்டணம் ரூ.1500/−இத்துடன் செலுத்தப்பட்டுள்ளது என்றும், ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி புகார்தாரரின் புகார் மனுவினை அனுமதித்து,எதிரியினை அழைத்து விசாரணை செய்து எதிரிக்கு சட்டப்படி தண்டனை வழங்குவதுடன்,எதிரி புகார்தாரருக்கு தரவேண்டிய காசோலை தொகையை இருமடங்காக புகார்தாரருக்கு எதிரி தரவேண்டும் எனவும் உத்தரவிட பணிந்து வேண்டப்படுகிறது.

2.புகாரைப் பெற்றுக் கொண்ட பிறகு புகார்தாரரை விசாரித்து நிரூபணவாக்குமூலம் பெற்று முதல்நோக்கு வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியதால் எதிரியை விசாரணைக்கு முன்னிலையாக வேண்டி அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்கீழ் புகார் மனுவின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு போதுமான கால அவகாசம் வழங்கியும், எதிரி மீதான குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251ன் கீழ் படித்து காண்பித்தபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எதிரி மீது பிரிவு 138ன் கீழ் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. எதிரி குற்றத்தை மறுத்ததால் புகார்தாரர் தரப்பில் ம.சா. 1 ஷோபனா சாட்சியாக விசாரிக்கப்பட்டும், புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றியவற்றை கு.வி.மு.ச.பிரிவு 313(1)ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி " பொய்சாட்சி" என்றும், " பொய்வழக்கு" என்றும் கூறி வழக்கை மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சி " உண்டு" என்று சொன்னார். எதிரி தரப்பில் எதிரியை விசாரணை செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டும் எதிரி தன்னை சாட்சியாக விசாரித்துக்கொள்ளாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் எவ்வித சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:06:49 +0530

<u>5. எதிரி தரப்பில் விளக்கம்:</u>

எதிரிக்கும், புகார்தாரருக்கும் எவ்வித பழக்க வழக்கமும், வரவு செலவும் இல்லை என்றும், எதிரிக்கு புகார்தாரர் காசோலை கொடுக்கவில்லை என்றும் எதிரிக்கும், புகார்தாரரின் மாமியாருக்கும்தான் நேரடி பழக்கம் என்றும் எதிரி புகார்தாரர் மாமியாரிடம் கொடுத்த காசோலையை புகார்தாரர் பெற்று கருவியாக இருந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் எதிரியின் முகவரி நெ. 294 /பி (1) இந்திராயாணிக்கா சந்து, வடக்கு ஆஜாரம், தஞ்சாவூர் மேற்கு என்றும் ஆனால் வழக்கு கேட்பு அறிவிப்பு எண்.811/2 ராமநாதபட்சந்து, நான்கு கால் மண்டபம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளதால் இந்த புகாருக்கான வழக்குமூலம் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றும் வாதிடப்பட்டது.

6. புகார்தாரர் தனது முதல் நிலை மெய்ப்பிக்கும் சுமையை நிறைவு செய்து எதிரி மீது மாற்ற முறையாவது சட்டம் பிரிவு 138 இன் படியான குற்றத்தை தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் மெய்ப்பித்துள்ளாரா ? இல்லையா?

7.எதிரி வழக்கில் ஓர் நிகழ்தற்குரிய எதிர்வாததிற்கான சாத்திய கூறுகளின் மேம்பட்ட தன்மையை முன்னிறுத்தி உள்ளாரா? எதிரி எடுத்துள்ள எதிர்வாதத்தை மெய்ப்பித்துள்ளாரா ? என்பதாகும்.

8**<u>. தீர்வு :</u>**

இவ்வழக்கின் எதிரி மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் விசாரிக்கத்தக்க வகையில் குற்றம் புரிந்துள்ளரா? என்பதை புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கின்றபோது, எதிரியால் புகார்தாரருக்கு, 29.04.2022ம் தேதியிட்டு எதிரி தனக்கு கொடுத்த தஞ்சாவூர் வடக்கு மெயின்ரோடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் காசோலை எண்:625846 ரூ.3 இலட்சம் அசல் – ம.சா.ஆ.1 ஆகவும், 30.04.2022ம் தேதியிட்ட மன்னார்குடி சௌத் இண்டியன் வங்கியிலிருந்து வங்கி கணக்கில் பணமில்லை என அனுப்பப்பட்ட ரிட்டன் மெமோ அசல் – ம.சா.ஆ.2 ஆகவும், 05.05.2022 ம் தேதிக்கு எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்–ம.சா.ஆ.3 ஆகவும், 13.05.2022 ம் தேதியில் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் Unclaimed என காரணம் காட்டப்பட்டு திருப்பப்பட்ட அஞ்சலக கவர் அசல்– ம.சா.ஆ.4 மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் முதல்நோக்கு வழக்கிற்கு தேவையான சங்கதிகள் இருப்பதாகவும் அறியமுடிகிறது.

9.இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 118 (அ) ஆகியவற்றின் மீதான சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ளது. பிரிவு 118(அ)ன் படி மறுத்துக்கூறும் சங்கதிகளை நிரூபித்தாலன்றி(Until the contrary is proved) கொடுக்கப்பட்ட ஆவணம் மறுபயனிற்காக வழங்கப்பட்டதாகவே கருதவேண்டும் என்று விளம்புகிறது. பிரிவு 139 மாற்றுமுறை ஆவணத்தை வைத்திருப்பவரிடம் அதை கொடுத்தவர் கடனுக்காக கொடுத்ததாகவே அனுமானிக்க வேண்டும் என்று கூறுகிறது. எனவே பிரிவு 118(அ) மற்றும் 139 ஆகியவற்றில் கூறியுள்ளவாறு எதிரி தனது தரப்பிலான வாதத்தை நிரூபிக்காத வரை காசோலை கடனுக்காகத்தான் வழங்கியதாக

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:06:58 +0530

அனுமானிக்க வேண்டும் என்று பிரிவு 138 ல் கூறப்பட்டுள்ளது.

10.புகார்தாரரும், புகார்தாரரின் குடும்பத்தினரும் எதிரிக்கு கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக நன்கு அறிமுகமாகி பழக்கப்பட்ட நபர்கள் ஆவார்கள் என்றும் அந்த வகையில் எதிரி அவரது சொந்த செலவினங்களுக்காக வேண்டி ரூ.3,00,000/– தொகை வேண்டும் என புகார்தாரரிடம் கேட்டுள்ளார் என்றும் மேலும் அந்த தொகையை எதிரி புகார்தாரரிடம் மூன்று மாத காலத்திற்குள் திருப்பி தந்துவிடுவதாக உறுதி அளித்துள்ளார் என்றும், எதிரி தனது குடும்பத்திற்கு நன்கு தெரிந்தவர் என்ற வகையில் புகார்தாரரும் எதிரி கூறிய வார்த்தைகளை உண்மை என நம்பி எதிரி கேட்ட ரூ.3,00,000/–தொகையை கடந்த 2022 ஜனவரி மாதம் எதிரியிடம் கொடுத்துள்ளர் என்றும் அவ்வாறு புகார்தாரர் எதிரியிடயம் பணத்தை கொடுக்கும் போது எதிரியிடமிருந்து பத்திரம் ஒன்றை எழுதி வாங்கிக் கொண்டுள்ளார் என்றும் மேற்படி பணத்தை பெற்றுக் கொண்ட எதிரி 3 மாதத்திற்குள் தொகையை கொடுக்காமல் தொடர்ந்து இழுத்தடித்து வந்துள்ளார் என்றும் இறுதியாக எதிரி தான் தரவேண்டிய தொகைக்காக அவரது வங்கிக்கணக்கு வைத்துள்ள தஞ்சாவூர் வடக்கு மெயின்ரோடு முகவரியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கிளையின் ரூ.3,00,000/–த்திற்கான (கணக்கு எண்:136401000025314)(காசோலை எண்:625846)காசோலை ஒன்றை 29.04.2022 தேதியிட்டு புகார்தாரரின் பெயரிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும் அவ்வாறு எதிரி அவரது வங்கி காசோலையை கொடுக்கும்போது தான் எழுதிக் கொடுத்த பத்திரத்தை திரும்ப பெற்றுக்கொண்டதாக புகார்தாரர் தெரிவிக்கிறார் என்றும் எதிரியின் வார்த்தையை உண்மை என நம்பிய புகார்தாரர் எதிரி கொடுத்த காசோலையை பணமாக்கும் பொருட்டு அவரது வங்கி கணக்கு வைத்துள்ள மன்னார்குடி சௌத் இந்தியன் வங்கிக் கிளையில் கடந்த 29.04.2022 அன்றே வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆனால் எதிரி கொடுத்த காசோலையானது புகார்தாரரின் வங்கியால் போதிய பணமில்லை (Funds Insufficient) என காரணம் காட்டப்பட்டு கடந்த 30.04.2022 அன்று திருப்பப்பட்டுவிட்டது என்றும், பின்னர் காசோலை திருப்பப்பட்ட விபரத்தை தெரிந்து கொண்ட புகார்தாரர் எதிரி கொடுத்த காசோலை பணமாக்காமல் திருப்பப்பட்ட விவரத்தை தெரிவித்தும், காசோலையில் கண்டுள்ள தொகையை புகார்தாரர் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியும் அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 05.05.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை எதிரி வசிக்கும் முகவரிக்கு ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்தேன் என்றும் அதனை எதிரி பெற்றுக்கொள்ளாததால் Unclimmed எனத் காரணம் காட்டப்பட்டு கடந்த 13.05.2022 அன்று திருப்பப்பட்டவிட்டது என்றும்,அறிவிப்பை பெற்றுக்கொள்ளாத எதிரி இதுநாள் வரை புகார்தாரருக்கு பதிலோ,பணமோ தராமல் தொடர்ந்து இழுத்தடித்து வருகிறார் என்றும்,எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டே வேண்டுமென்றே என்னிடம் காசோலை கொடுத்து நம்பவைத்து, ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என்றும், மேற்படி எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் படி குற்றமாகிறது என்றும், இவ்வழக்கானது புகார்தாரரின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளமல் திருப்பி அனுப்பிய தேதியான 13.05.2022ம் தேதியில் இருந்து 45

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:04 +0530

நாட்களுக்குள் அதாவது 26.06.2022 க்குள் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் உரிய நீதிமன்ற கட்டணம் ரூ.1500/−இத்துடன் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஆகவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி புகார்தாரரின் புகார் மனுவினை அனுமதித்து,எதிரியினை அழைத்து விசாரணை செய்து எதிரிக்கு சட்டப்படி தண்டனை வழங்குவதுடன்,எதிரி புகார்தாரருக்கு தரவேண்டிய காசோலை தொகையை இருமடங்காக புகார்தாரருக்கு எதிரி தரவேண்டும் எனவும் உத்தரவிட பணிந்து வேண்டப்படுகிறது.

11.மேற்படி சங்கதிகளிலிருந்து பிரிவு 118(அ) மற்றும் 139 ஆகியவற்றில் கூறியுள்ளவாறு எதிரி தனது தரப்பிலான வாதத்தை நிரூபிக்காத வரை காசோலை கடனுக்குக்காகத்தான் வழங்கியதாக அனுமானிக்க வேண்டும் என்று பிரிவு 138 ல் கூறப்பட்டுள்ளது என்று பின்வரும் முன்தீர்ப்புகளை புகார்தாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தை பரிசீலனை செய்த வகையில்,

Dishonour of cheque for insufficiency, etc., of funds in the account.–

Where any cheque drawn by a person on an account maintained by him with a banker for payment of any amount of money to another person from out of that account for the discharge, in whole or in part, of any debt or other liability, is returned by the bank unpaid, either because of the amount of money standing to the credit of that account is insufficient to honour the cheque or that it exceeds the amount arranged to be paid from that account by an agreement made with that bank, such person shall be deemed to have committed an offence and shall, without prejudice to any other provisions of this Act, be punished with imprisonment for a term which may be extended to two years, or with fine which may extend to twice the amount of the cheque, or with both:Provided that nothing contained in this section shall apply unless

(a)the cheque has been presented to the bank within a period of six months from the date on which it is drawn or within the period of its validity, whichever is earlier

*(b)**the payee or the holder in due course of the cheque, as the case may be, makes a demand for the payment of the said amount of money by giving a notice in writing, to the drawer of the cheque, [within thirty days of the receipt of information by him from the bank regarding the return of the cheque as unpaid;***

(c)the drawer of such cheque fails to make the payment of the said amount of money to the payee or, as the case may be, to the holder in due course of the cheque, within fifteen days of the receipt of the said notice.Explanation.—For the purposes of this section, "debt or other liability" means a legally enforceable debt or other liability.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:13 +0530

என்பதும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று புகார்தாரர் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு காசோலை எதிரியுடையது அல்ல மற்றும் காசோலையில் கண்ட கையெழுத்து எதிரியுடையது அல்ல என்பதும் வழக்கு காசோலை வங்கியில் செலுத்தப்பட்டு போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளதும் , அதன் பின்னர் சட்டத்திற்கு உட்பட்ட காலத்திற்குள் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டதும் மறுக்கப்படவில்லை.

12. இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரியின் நிரந்தர முகவரிக்கு அனுப்பப்படவில்லை என்றும் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பு (Demand Notice)அனுப்பப்பட்ட காலத்தில் எண்.811/2, ராமநாதபட்சந்து , நான்கு கால் மண்டபம் , தஞ்சாவூர் . செல் 8248489701 என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி முகவரி எதிரியின் முகவரி இல்லை என்றும் எதிரியால் வாதிடப்பட்டது. Ex.P.4 ஆவணத்தை வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்ட பதிவஞ்சல் கவரை பார்வையிடுகையில் கடந்த 06.05.2022 ஆம்தேதி Enquiry/Door Lock என்றும் 07.05.2022 ஆம் தேதி Intimation–II என்றும், 13.05.2022 ஆம் தேதி Unclaimed என்ற மேற்குறிப்புடன் திருப்பப்பட்டுள்ளதும் ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

13.நீதிமன்றத்தின் மூலம் புகார் கோப்புக்கு எடுத்த பின்னர் எதிரிக்கு அனுப்பப்பட்ட சம்மன் 28.07.2022 ஆம்தேதி 1st Intimation என்றும் , 29.07.2022 ஆம் தேதி 2nd Intimation என்றும் , 04.05.2022 ஆம் தேதி Door Lock என்றும், 08.05.2022 ஆம் தேதி Unclaimed என்ற Endorsement–டன் திருப்பப்பட்டுள்ளது.

14.புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த எதிரி தரப்பில்" புகாரில் சொல்லப்பட்டுள்ள முகவரி எதிரியின் முகவரி அல்ல என்று சொன்னால் சரியல்ல. அங்குதான் வசித்து வருவதாக சொன்னார். எதிரியின் முகவரியானது நெ. 294 /பி (1) இந்திராயாணிக்கா சந்து , வடக்கு ஆஜாரம் , தஞ்சாவூர் மேற்கு என்று வாதிடப்பட்டது. எதிரியின் முகவரியின் மேற்படி முகவரிதான் என்பதையும் எண். 811/2 ராமநாதபட்சந்து , நான்கு கால் மண்டபம் , தஞ்சாவூர் என்பது எதிரியின் முகவரி அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் எந்த சாட்சியமும் எதிரி தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை.

15. Ex.P4 மற்றும் நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு அனுப்பப்பட்ட பதிவஞ்சல் ஆவணங்களை பார்வையிடுகையில் Intimation Given என்ற மேற்குறிப்புடன் திருப்பப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் பதிவஞ்சல்களில் குறிப்பிடப்பட்டுள்ள செல் நம்பர் 8248489701 என்பதும் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையம் எழுதிக்கொடுக்கும்பொழுது கொடுத்துள்ள செல் நம்பரும் ஒன்றாக உள்ளதையும் நீதிமன்றம் கவனத்திற்கொள்கிறது.

16. எனவே, மேற்கண்ட ஆவணங்களிலிருந்து எதிரி மோகன்தாஸ் எண். 811/2 ராமநாதபட்சந்து , நான்கு கால் மண்டபம் , தஞ்சாவூர் என்ற முகவரிதான் வசித்து வந்துள்ளார் என்றும் அந்த முகவரிக்கு வழக்கு கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும் எனவே வழக்கிற்கான வழக்கு மூலம் உள்ளது என்றும் இந்த நீதிமன்றம்

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:20 +0530

தீர்மானிக்கிறது.

17. எதிரி வழக்கு காசோலையில் புகார்தாரரின் மாமியாருக்கு கொடுத்ததாக சொல்லும் நிலையில் அது குறித்து சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சிகளையும், எவ்வித ஆவணங்களையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால் புகார்தாரருக்கு பிரிவு 139 NI Act ன் கீழான அனுமானம் ஏற்படுகிறது என்று கூறி பின்வரும் தீர்ப்புகளை முன்னிலைப்படுத்தி மாண்பமை உச்சநீதிமன்றம் Hiten P Dalal vs. Bratindranath Banerjee
AIR 2001 SC 3897 என்ற வழக்கில்………

"The presumption U/S.139 of the Act is a presumption of law, it is not a presumption of fact. This presumption has to be raised by the Court in all the cases once the factum of dishonour is established. The onus of proof to rebut this presumption lies on the accused. The standard of such rebuttal evidence depends on the facts and circumstances of each of case. Such evidence must be sufficient, cogent and should prove beyond any reasonable doubt. Therefore, a mere explanation is not enough to repel this presumption of law" என்பதை கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது என்றும்,

மேலும், மாண்பமை உச்சநீதிமன்றம்
K.N.Beena Vs. Muniyappan & Anr. AIR 2001 SC 2895
மற்றும்
Vijay Vs. Laxman 2013 (3) SCC 86. ஆகிய வழக்குகளில்,

"The burden to prove the consideration for the cheque lies on the accused. If not rebutted, the presumption is that the cheque was issued for consideration. It is for the accused to prove that the cheque was not issued towards a debt or liability. He has to lead credible evidence for rebuttal of this presumption. Mere denial of averments will not suffice to shift this burden onto the complainant " என்று எடுத்துரைத்துள்ளது என்றும்,

மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம்…………….
P.RASIYA vs ABDUL NAZEWR AND ANR
Appeal No. 1233 –1235 of 2022 Dated 12.08.2022
என்ற வழக்கில்…..

"Once the initial burden is discharged by the complainant that the cheque was issued by the accused and the signature and the issuance of the cheque is not disputed by the accused, in that case, the onus will shift upon the accused to prove the contrary that the cheque was not for any debt or other liability. The presumption under section 139 of the N.I. Act is a statutory presumption and thereafter, once it is presumed that the cheque is issued in whole or in part of any debt or other liability which is in favour of the complainant/holder of the cheque, in that case, it is for the accused to prove the contrary "

புகார்தாரர் தனது வழக்கை நிரூபித்துள்ளதாகவும் எதிரிக்கு தக்க தண்டனை வழங்கும் படி வாதிட்டார்.

18. இவ்வழக்கில் உள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து ஆராய்ந்தபோது, எதிரி புகார்தாரர் வழக்கை மறுத்துக் கூறவோ, எதிரி புகார்தாரரின் மாமியாரிடம் வாங்கிய கடனுக்கு வழக்கு காசோலை கொடுத்தார் என்றோ, மேற்படி தொகையை திரும்ப செலுத்திவிட்டது குறித்தோ, எதிரி தரப்பில் எந்த

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:28 +0530

சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எதிரி தனது காசோலைகள் புகார்தாரருக்கு சென்றது குறித்தும் சாட்சிகள் மூலமோ, (or) ஆவணங்கள் மூலமோ நிரூபணம் செய்யவில்லை. ஆனால் சிறப்புச் செய் சட்டங்களால் கூறப்படும் விலக்குகளிலும் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் மீது தன்னுடைய வாதத்தை நிலைநாட்டும் சுமை வைக்கப்பட்டிருக்கும் வழக்குகளிலும், சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை (preponderance of probabilities) வாயிலாக மட்டுமே பொறுப்பை விடுவிக்க வேண்டும். சந்தேகத்தை ஏற்படுத்துவதன் வாயிலாக அல்ல என்பதும் காசோலை மோசடி வழக்கு குற்றவியல் வழக்காக இருந்தாலும் சாத்தியகூறுகளின் மேம்பட்ட நிலையினைக்கொண்டு தான் முடிவு செய்ய வேண்டியுள்ளது.

19.மேலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்தாராய்ந்ததில் புகார்தாரர் வழக்கு நிரூபிக்கப்பட்ட நிலையில், ம.சா.ஆ.1 வழக்கு காசோலை சட்டப்படியான பொறுப்பிற்கு தான் கொடுக்கப்பட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. புகார்தாரர் தமது வழக்கை நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20.இறுதியாக மாற்று முறையாவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் எதிரி குற்றம்புரிந்துள்ளதாக முடிவுசெய்து பிரிவு 278(2) BNSS–ன் கீழ் எதிரிக்கு ஆறு மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், பிரிவு 395(3) BNSS–ன் கீழ் இழப்பீடாக ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)ஐ புகார்தாரருக்கு 1 மாத காலத்தில் செலுத்தி வைக்கவேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் மேலும் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனையும் தண்டனையாக அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி தண்டனையை ஒன்றன் பின் ஒன்றாக (Consecutive)அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றம் அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:35 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மன்னார்குடி.

1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி

சாட்சியின் வரிசை எண்.	சாட்சியின் பெயர்
ம.சா.1	ஷோபனா

2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

சான்றாவணங்களின் வரிசை எண்.	சான்றாவணம் குறிப்பு	சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்
ம.சா.ஆ.1	29.04.2022 எதிரி தனக்கு கொடுத்த தஞ்சாவூர் வடக்கு மெயின் ரோடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் காசோலை எண்.625846 ரூ.3 இலட்சம்–அசல்	ம.சா.1–மூலம்
ம.சா.ஆ.2	30.04.2022 தேதியிட்ட மன்னார்குடி சௌத் இந்தியன் வங்கியிலிருந்து வங்கி கணக்கில் பணமில்லை என அனுப்பப்பட்ட ரிட்டன் மெமோ–அசல்	ம.சா.1–மூலம்
ம.சா.ஆ.3	05.05.2022 எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்.	ம.சா.1–மூலம்
ம.சா.ஆ.4	13.05.2022 எதிரி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் Unclaimmed என காரணம் காட்டப்பட்டு திருப்பப்பட்ட அஞ்சலக கவர்–அசல்	ம.சா.1–மூலம்

3. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்று பொருள் – இல்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

குறிப்பு

1. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2.எதிரி விசாரணை காலத்தில் ஜாமினில் இருந்தார்.
3. எதிரி ஆஜரில்லாமல் தீர்ப்புரை பகரப்பட்டது.

நகல் :

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.15 19:07:47 +0530